# பாலியல் வன்கொடுமை!

**Dr. Magesh Rajagopal (Psychiatrist)** அறம் மனநல மருத்துவமனை, திருச்சி

**Tamil Psychiatry Journal, Vol. I, Issue - 2, July - September 2025, Page 34 - 36**

குழந்தைகளுக்கு ஏற்படும் பாலியல் வன் கொடுமையானது துரதிஷ்டவசமாக எல்லைகளைக் கடந்து எல்லா நாடுகளிலும் நடந்து கொண்டே இருக்கின்றது. பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எதிர்காலம் முற்றிலுமாக பாதிக்கப்படுகின்றது. வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் நடத்தை மாற்றம், அதிக பாலியல் உணர்ச்சி, உடல் மற்றும் உளவியல் ரீதியான பாதிப்புகள் என பல ரூபத்தில் பின்விளைவுகளைச் சந்திக்கின்றனர்.

பாலியல் வன்கொடுமை குறித்து 2017ல் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் 5% முதல் 18% சிறார்கள் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது (1). 6 வயது முதல் 12 வயது வரை உடைய குழந்தைகள் தான் பாலியல் வன் கொடுமையால் அதிகம் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் கூறகின்றன (3). குழந்தைகளுக்கு எதிராக முறைகேடாக நடந்து கொள்பவர்களில் 85% பேர் ஆண்கள் என்றும், அவர்களில் பெரும் பாலானோர் 30 வயது முதல் 40 வயதுள்ளவர்கள் என்றும் கூறப்படுகிறது (2). பொதுவாக ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகளுக்கே பாலியல் வன்கொடுமை அதிகம் ஏற்படுகின்றது (2). மேலும் இது போன்ற பாலியல் சீண்டல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் குழந்தைகளுக்கு நன்கு பரிட்சயமுடைய ஆண்களால்தான் பெரும்பாலும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது (3).

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உளவியல் ரீதியாக நன்கு செயல்படுவதில்லை. இவர்கள் பாதிப்படைந்ததின் விளைவாக மற்றவர்களை நம்பிக்கையுடன் அணுகவோ அல்லது பேசிப்பழகவோ மாட்டார்கள். இதனால், பொதுவாகவே இவர்கள் மற்றவர்களிடமிருந்து உறவைத் தவிர்த்து வருவார்கள். சிலர் இதற்கு எதிர்மாறாக மற்றவர்களிடம் கட்டுப்பாடில்லாமல் பழகி மீண்டும் பாதிக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளும் அளவிற்கு சென்று விடுவார்கள் (3).

குழந்தைப் பருவத்தில் ஏற்படும் தாக்கம் வளர்ந்த பருவத்தில் பலவிதமான மனரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. பல்வேறு மனநலத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் சுமார் 26% முதல் 32% மனநோயாளிகளுக்கு தங்கள் குழந்தைப் பருவத்தில், மனரீதியான காயங்கள் ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. மன அழுத்தம், மனப்பதற்றம், சைக்காட்ரிக் அறிகுறிகள், மனச்சிதைவு நோய், தற்கொலை எண்ணங்கள், ADHD, Disassociation Disorder, Conversion Disorder போன்ற பிரச்சனைகள் உள்ளவர்களிடத்தில் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில் தங்கள் இளம் பருவத்தில் இதுபோன்ற கசப்பான அனுபவம் நடந்திருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சிறு வயதில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள், போதைப் பொருட்களுக்கு அதிகம் அடிமையாவதாக ஆய்வுகள் கூறுகின்றன. அதிலும் குறிப்பாக ஊசி மூலம் செலுத்தப்படும் போதைப் பொருட்களை அதிகம் பயன்படுத்துவதாகவும், அவ்வாறு போதைப் பொருளை உட்செலுத்திக் கொள்ளும் போது மற்றவர்களோடு ஊசியை பகிர்ந்து கொள்வதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால், ரத்தத்தின் வழியாக பரவக்கூடிய கிருமிகளான HIV, Hepatitis B,C Virus போன்ற கிருமிகள் எளிதாக ஒரு நபரிடமிருந்து மற்றவருக்கு பரவ அதிக வாய்ப்பு ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

குழந்தைப் பருவத்தில் பாலியல் ரீதியாக பாதிக்கப்படும் குழந்தைகள் வளர்ந்தவுடன் பாலியல் தொழிலில் ஈடுபடுவது, கண்ட கண்ட ஆண்களிடம் வரைமுறையின்றி பாதுகாப்பற்ற உடலுறவு வைத்துக் கொள்வது, ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்களிடம் கள்ளத்தொடர்பு வைத்துக் கொள்வது போன்ற நடத்தை பிரச்சனைகளும் அதிகம் உருவாகின்றன. இதனால், இவர்களிடையே HIV, Hep B மற்றும் C, பல்வேறு பால்வினை நோய்கள் ஏற்படுவெதற்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளன (4).

பிரேசில் நாட்டிலுள்ள ஆய்வாளர்கள் நடத்திய தொகுப்பாய்வில், கிட்டத்தட்ட 16 ஆய்வுக் கட்டுரைகளின் முடிவுகளை எடுத்து ஆராய்ந்து பார்த்ததில், பல்வேறு மனநலப் பிரச்சனைகள் வளர்ந்த பின்பு ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. Post Traumatic Stress Disorder, தூக்கப்பிரச்சனை, விளிம்புநிலை ஆளுமைக் கோளாறு (Borderline Personality Disorder), அதிக தற்கொலை எண்ணம், தாம்பத்திய உறவை வெறுத்தல், Psychotic அறிகுறிகளான காதில் குரல் கேட்பது போன்ற எண்ணற்ற மனநலப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன (5).

வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உளவியல் ரீதியாக சொல்லிலடங்கா துன்பத்திற்கு ஆளாவார்கள். உணர்ச்சிக் கொந்தளிப்புகளான திடீர் கோபம், திடீர் மனக்குழப்பம், ஆழ்ந்த துயரம், சிறு விஷயத்திற்கு அதிக மகிழ்ச்சியடைவது, எனப் பல்வேறு உணர்ச்சி மாற்றங்கள் ஏற்பட்டு அவர்களுடைய அன்றாட வாழ்க்கையும் பாதிப்புக்குள்ளாகும்.

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டு குறைத்து மதிப்பிட்டுக் கொள்வதோடு அறுவருப்பும் அடைவார்கள். இதுபோன்று தங்களைத் தாங்களே தாழ்வாக நினைத்துக் கொள்வதினால் மன அழுத்தம், மனச்சோர்வு போன்ற பிரச்சனைகள் தீவிரமடைந்து மனநோயாக மாறி விடும் அபாயமுள்ளது பாலியல் வன்கொடுமையிலிருந்து மீண்டவர்களில் கிட்டத்தட்ட 33% பேர் மனச்சோர்வு நோயால் பாதிக்கப்படுவதாக மலேசியாவில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது (6).

அதிக மனஅழுத்தத்தின் காரணமாக சில நேரங்களில் அதிக தலைவலி, வயிற்றுவலி போன்ற Somatization Disorder பிரச்சனைகள் ஏற்படும். இதே போல் சிலர் காரணமின்றி அதிக உணவு எடுத்துக் கொள்ளும் பழக்கத்திற்கு ஆளாவார்கள். இதனால் உடல் எடை அதிகரித்து நாளடைவில் நீரிழிவு நோய் போன்ற நீண்ட நாள் பிரச்சனைகளாகவே மாறி, இதயக் கோளாறு போன்ற தீவிரப் பிரச்சனைக்கு வழிவகுத்து விடும் (7).

சிறுவயதில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படும் குழந்தைகள் பயத்தின் காரணமாக இதைப்பற்றி தங்கள் குடும்பத்தினரிடம் தெரிவிக்காமல் விட்டு விடுவார்கள். குறிப்பாக குற்றவாளிகள் குடும்ப நபராக இருந்து, அதை வெளியில் சொன்னால் மற்றக் குடும்பத்தினர்கள் நம்பமாட்டார்களோ என்று தவறாக எண்ணியும், அவப்பெயர் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்தும், மற்றவர்களிடம் உண்மையை வெளிப்படுத்தாமல் விட்டுவிடுவார்கள். சில குழந்தைகள் வீட்டில் நடக்கும் கொடுமைகளிலிருந்து தப்பிப்பதற்காக வீட்டை விட்டு வெளியேறவும் செய்வார்கள். அவ்வாறு வெளியேறிய குழந்தைகள் பாதுகாப்பற்ற சூழல் காரணமாக குடி மற்றும் புகைப் பழக்கத்திற்கு ஆளாகி, நாளடைவில் போதைப் பொருட்களுக்கும் அடிமையாகி விடுவார்கள், தமக்கு நடந்த கொடுமைகளை வெளியே சொல்லாமல் மனதிலேயே பூட்டி வைத்திருக்கும் குழந்தைகளுக்கு மீண்டும் பாலியல் வன்கொடுமைகள் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் உணர்ச்சி ரீதியான பாதிப்புகள் அதிகம் ஏற்படுவதாலும், நடந்த கொடுமைகளை நினைத்து பார்ப்பதினால் ஏற்படும் உளவியல் மாற்றங்களினாலும், அதைச் சமாளிப்பதற்காக போதைப் பொருட்கள் உட்பட பல்வேறு காயங்களை மறப்பதற்கான வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இது போன்ற பாதுகாப்பற்ற கேடு விளைவிக்கக் கூடிய வாழ்க்கை முறையினால் மேலும் பல கொடுமைகளுக்கு ஆளாவார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. (8,9).

குழந்தைப் பருவத்தில் ஏற்படும் வன்கொடுமைகளின் காரணமாக வளர்ந்த பின்பு ஏற்படும் பாதிப்புகள் பற்றிய கட்டுரைகள்தான் அதிகம் வெளிவந்துள்ளன. ஆனால் மறைமுகமாக நடக்கும் கொடுமைகளை எதிர்கொள்ளும் குழந்தைகளின் மனநிலை எப்படி இருக்கும் என்பதனைப் பற்றிய ஆராய்ச்சிகள் குறைவாகவே உள்ளன. நடைமுறையில் இது போன்ற ஆய்வுகளைக் குழந்தைகளிடம் நடத்துவதில் சிக்கல்கள் அதிகம் இருந்தாலும், குழந்தைப் பருவத்தில் என்னென்ன பாதிப்புகள் ஏற்படுத்தும் என்று ஆராய்ந்து பார்த்தால்தான் மேலும் பல தகவல்கள் வெளிவரும். அப்போதுதான் குழந்தைப் பருவத்தில் ஏற்படும் பிரச்சனைகளைத் தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.

**Reference:**


1. Senn T. E., Braksmajer A., Urban M. A., Coury-Doniger P., Carey M. P. (2017). Pilot test of an integrated sexual risk reduction intervention for women with a history of childhood sexual abuse. AIDS Behav 21,3247-3259. 10.1007/s10461-017-1854-y,
2. Pereda N., Abad J., Guilera G. (2016). Lifetime prevalence and characteristics of child sexual victimization in a community sample of Spanish adolescents. J. Child Sex, Abus. 25, 142-158. 10.1080/10538712.2016.1123791,
3. Homma Y., Wang N., Saewyc E., Kishor N. (2012). The relationship between sexual abuse and risky sexual behavior among adolescent boys: a meta-analysis. J. Adolesc. Health 51, 18-24. 10.1016/j. jadohealth.2011.12.032, PMID:
4. Wilson HW, Widom CS. Pathways from childhood abuse and neglect to HIV-risk sexual behavior in middle adulthood. J Consult Clin Psych. 2011;79(2):236-246.
5. Cruz MAD, Gomes NP, Campos LM, Estrela FM, Whitaker MCO, Lirio JGDS. Impacts of sexual abuse in childhood and adolescence: an integrative review. Cien Saude Colet. 2021 Apr;26(4):1369-1380. Portuguese, English, doi: 10.1590/1413-81232021264.02862019. Epub 2019 Jun 9. PMID: 33886765.
6. 22 Wahab S, Tan SMK, Marimuthu S, Razali R, Muhamad NA. Young female survivors of sexual abuse in Malaysia and depression: What factors are associated with better outcome? Asia-Pacific Psychiatry. [Serial on the Internet]. 2013 [cited 2019 Jun 04); 5:95-102. Available from: http://doi.wiley.com/10.1111/appy.12051
7. Amianto F, Spalatro AV, Rainis M, Andriulli C, Lavagnino L, Abbate-Daga G, Fassino S. Childhood emotional abuse and neglect in obese patients with and without binge eating disorder. Personality and psychopathology correlates in adulthood. Psychiatry Res. [Serial on the Internet]. 2018 [cited 2018 Dec 12]; 269:692-699.
8. Clayton HB, Lowry R, August E, Everett Jones S. Nonmedical Use of Prescription Drugs and Sexual Risk Behaviors. Pediatrics. (Serial on the Internet]. 2016 [cited 2019 Jun 04); 137(1):e20152480.
9. Barrios YV, Gelaye B, Zhong Q, Nicolaidis C, Rondon MB, Garcia PJ, Sanchez PAM, Sanchez SE, Williams MA. Association of Childhood Physical and Sexual Abuse with Intimate Partner Violence, Poor General Health and Depressive Symptoms among Pregnant Women. PLoS One. (Serial on the Internet]. 2015 [cited 2019 Jun 04]; 30;10(1):e0116609.